மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுடுகாட்டைப் பற்றியா இவ்வளவு நேரம், அதுவும் காலை நேரத்திலா பேசுவது?

ஹார்வி மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்.

* *183 வினா*—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

அம்பாசமுத்திரம், ஹார்வி மில்லின் சாயப்பட்டறையின் கழிவு நீர் (கெமிகல்ஸ்) தாம்பரபரணி நதியில் சேர்க்கப்படுவதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சட்டப்பேரவைமுன் விவரமான அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Pultry Breeders Marketing Society, Madras.

* 184 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister **for** Public Health be pleased to state :

(*a*) whether the Government have given any assistance for the starting of the Poultry Breeders Marketing Society in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவரமான அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

THIRU N. DENNIS : May I know whether there is any proposal under the consideration of the Government to start such societies in the rural areas also?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, already there are so many co-operative societies which are formed in the rural areas and the Department itself are facilitating marketing of eggs produced by such societies. In the Madras City and its surrounding

---

@ 261–265-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.

* 266–267-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1973 பிப்ரவரி 28]

areas, a large number of eggs are produced and in order to facilitate marketing of such production of eggs, such a society is formed in the City of Madras and if found necessary in the other big cities, after some experimentation, such societies may be started.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.

*** வினா—176 திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி பேரூராட்சியின் குடிநீர் வழங்கு திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கும்முடிப்பூண்டி பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் தற்சமயம் பரிசிலனையில் இல்லை. கும்முடிப்பூண்டி பேரூராட்சியினர் முன்வந்து குடிநீர் திட்டம் தேவை என்று குடிநீர் வடிகால் வாரியத்தை அணுகினால் இதுபற்றி மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நாடெங்கிலும் குடிநீர் வழங்கு திட்டம் நிறைவேற்றப்படும் இந்தக் காலத்திலும், அந்தப் பேரூராட்சியினர் கட்சி மனப்பான்மையின் காரணமாக உரிய நேரத்தில் முன்வராவிட்டாலும் இப்பொழுது தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு சிறப்புத் திட்டத்தின்கீழ் எல்.ஐ.சி.யிடம் உதவி பெற்று இதை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஆறு ஆண்டுக் காலத்தில், சுமார் 40 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற வரவு-செலவுத் திட்டத்திலே அறிவிப்பு வந்திருப்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். அதன் கீழ் இதுபோன்ற கிராமங்கள் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பஞ்சாயத்து யூனியன்கள் கேட்கவில்லையென்றால் குடிநீர் வழங்கப்படாதா? அவர்கள் கேட்காவிட்டாலும் குடிநீர் வழங்குவதற்குத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் சொன்ன பதிலுக்குப் பிறகும் இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பது வியப்பைக் கொடுக்கிறது. இதுவரையிலும் இருந்தது, பஞ்சாயத்து